OS 400/2021

வா.சா. 1 வெங்கடேசன் த/பெ கிருஷ்ணன்

நாள் 06.12.2024

1 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

3. அண்ணாமலைக்கும் எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 11 வருடங்களாக பழக்கம். அண்ணாமலை என்னிடம் ரூ.3,00,000/- அடமான கடன் பெற்றதாக சொல்லும் சமயத்தில் அண்ணாமலைக்கு சொந்தமான தேவிகாபுரத்தில் உள்ள கல்யாண மண்டத்தை வட்டிக்காக வைத்துக்கொள்ளும் படி வாய் மொழியாக பேசப்பட்டது என்றால் சரியல்ல.

4. இறந்த அண்ணாமலை தன் தற்கொலைக்கு காரணமாக ஒரு கடிதம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இறந்த அண்ணாமலை அந்த கடிதத்தில் ரூ.3,00,000/- கடனாக கொடுத்த என்னுடைய தொல்லையின் காரணமாகவும் மேலும் ரூ.1,00,000/- வீதம் 2 தவணைகளில் பெற்றதாகவும்' அதனால்' இறந்த அண்ணாமலை எனக்கு கொடுக்க வேண்டிய பாக்கி தொகை ரூ.5,00,000/- மட்டும் தான் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றும் அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.

5. அவ்வாறு இறந்த அண்ணாமலை என்னுடைய தொல்லையின் காரணமாக தான் தற்கொலை செய்துகொண்டதாக எழுதி வைத்த கடிதத்தின் அடிப்படையில் தான் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் நான் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு சிறைக்கு சென்றேன் என்றால் சிறைக்கு சென்றது உண்மை ஆனால் அந்த வழக்கு பொய்யான வழக்கு ஆகும்.

6. அண்ணாமலை இறந்த பிறகு இந்த வழக்கு பிரதிவாதிகள் 1முதல் 3 வரையானவர்கள் மீது திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இறந்த அண்ணாமலையின் கல்யாண மண்டபம் குறித்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் மாற்று பரிகாரமாக முன் தொகை வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று கோரி அசல் வழக்கு எண். 7/2022 என்ற வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் அந்த வழக்கு சொத்து வேறு கல்யாண மண்டபம் வேறு ஆகும்.

7. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு குறித்து அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள பரிவர்த்தனை குறித்தும் மேலும் அசல் வழக்கு எண். 7/2022 வழக்கு குறித்து அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கு கடன் குறித்த பரிவர்த்தனை குறித்தும் சேர்த்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு இரண்டு பரிவர்த்தனைகளையும் சேர்த்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபடவில்லை. ஆனால் அந்த அந்த வழக்கு பரிவர்த்தனை குறித்து அந்த அந்த வழக்கிற்காக அனுப்பப்பட்ட வழக்கிறஞர் அறிவிப்புகளில் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

8. மேற்சொன்ன 2 வழக்கறிஞர் அறிவிப்புகளும் ஒரே தேதியில் அனுப்பப்பட்டதா அல்லது வெவ்வேறு தேதிகளில் அனுப்பப்பட்டதா என்றால் 2 அறிவிப்புகுளுக்கும் இடையே 3 நாட்கள் இடைவெளி இருக்கும்.

9. அண்ணாமலை உயிருடன் இருந்த வரையில் அவரது கல்யாண மண்டபத்தை பயன்படுத்தி அடமான கடனுக்கான வட்டி தொகையை நான் கழித்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல கல்யாண மண்டபத்தை நான் நடத்தவில்லை அண்ணாமலை தான் நடத்தினார்.

அவ்வாறு அண்ணாலை வட்டித்தொகையையும் கொடுத்து அசல் தொகையையும் கொடுத்த பிறகும் நான் அண்ணாமலையை தொடர்ந்து தொல்லை கொடுத்தேன் என்றால் சரியல்ல.

10. அவ்வாறு அடமான கடனுக்கான அசல் மற்றும் வட்டியை நான் பெற்றுக்கொண்டதால் அடமான கடன் சொத்து குறித்த ஆவணத்தை ரத்து செய்து தருவதாக நான் உறுதி அளித்தேன் என்றும் அதன் அடிப்படையில் அடமானம் ரத்து செய்யப்படும் அதே தேதியில் அடமான சொத்தினை 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுப்பதாக பேசி முடிவெடுக்கப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் அடமான ரத்து பத்திரமும் 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரைய பத்திரமும் பதிவு செய்து கொடுக்க சார் பதிவாளர் அலுவலத்திற்கு வருவதாக நான் சொல்லிவிட்டு அதன் பின்னிட்டு அந்த சொத்தினை எனக்கே கிரையம் கொடுக்க வேண்டும் என்று அந்த தேதியில் அடமான ரத்து செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையானவர்கள் தாவா சொத்தினை எனக்கு கிரையம் கொடுக்க வில்லை என்ற காரணத்தினாலும் மேலும் அண்ணாமலை எழுதி வைத்த கடிதத்தின் அடிப்படையில் என் மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்கினை வாப்பஸ் பெற வைக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் தான் ஏற்கனவே கடன் தொகையை பைசல் செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தின் அடிப்படையில் தவறாக இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. எனக்கு தாவா சொத்தினை 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரிந்தும் பைசல் ஆன கடன் தொகைக்காக பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பொய்யான வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.